Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Feminism in the Sangam Literature

**T. Muthu Lakshmi,** Reg. No.: 23213154022019, Ph.D. Scholar of Tamil, S. T. Hindu College, Nagercoil-2, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD:** https://orcid.org/0009-0004-4472-8375
**Dr. C. Jessy Rose**, Associate Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil-2, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD:** https://orcid.org/0009-0002-7535-0542
**DOI: 10.5281/zenodo.14752502**

## Abstract

*The themes of Sangam literature revolve around two main aspects. They are love and valour. Sangam Era poets presented nature as a backdrop for their imaginative and factual descriptions. It provides valuable information through the poems. The beloved or Thalaivi is a prominent figure in Sangam literature. She is revered for her exceptional qualities. Sangam women were known for their bravery and often shared the throne with kings. They lived with dignity and were adorned with beautiful jewellery. It is impossible to give a universal definition of feminism that applies to all societies in the world. Although there are many definitions of feminism, the general concept of Tamil feminism is to give equal rights for women at all levels of life. This research paper explores the concept of feminism in Sangam literature. It also highlights the feminist ideas that are instilled in the Sangam poems.*

**Keywords:** Women, Dignity, Feminism, Sangam Literature. Sangam Women, Sangam Era.

## References

[1] Kothandam, K. M. *Thirukkural, Ilaigharkalukkana Eliya Urai.* New Century Book House (P) Ltd. Chennai, 2014.
[2] Saminathiyar, U. Ve. *Kurunthokai Moolamum Uraium*. U.Ve.Sa. Nool Nilaiyam, Chennai, 2000.
[3] Subramaniyam, P. *Paripadal (Moolamum Uraiyum).* New Century Book House (P) Ltd. Chennai, 2007.
[4] Dadsinamoorthi, A. *Inkurunooru (Moolamum Uraiyum).* New Century Book House (P) Ltd. Chennai, 2011.
[5] Thirugnasampanthar, S. *Tholkappiyam Porul Athikaram (Moolamum Uraium)*. Kathir Pathippakam, Thiruvaiyar, 2022.
[6] Puliyur Kesikan, *Natrinai Erandam Pakuthi Thelivurai*. Pari Nilayam, Chennai, 2007.
[7] Muthu Chidambaram, C. *Penniyam Thottamum Valarsium*, Muthu Pathippakam, Thirunelveli, 2005.
[8] Viswanathan, A. *Kalithogai Moolamum Uraiyum*, New Century Book House (P) Ltd., Chennai, 2004.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# சங்க இலக்கியத்தில் பெண்ணியம்

**தெ. முத்து லெட்சுமி,** பதிவு எண்: 23213154022019, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ. தி. இந்துக் கல்லூரி. நாகர்கோவில்-2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0004-4472-8375**
**முனைவர் C. ஜெஸிறோஸ்**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-7535-0542**
**DOI: 10.5281/zenodo.14752502**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியத்தின் பாடுபொருட்கள் காதல், வீரம் என்ற இரு நிலைகளில் அமைகின்றன. சங்ககாலப் புலவர்கள் இயற்கையை முன்வைத்து கற்பனைகளாகவும், உண்மைகளாகவும் சில தகவல்களை நமக்குச் சங்கப் பாடல்களாய் தந்தனர். சங்க கால மாந்தர்களில் சிறப்பாக கருதப்படும் தலைவி என்னும் பெண் பாத்திரம் போற்றப்படக்கூடியதாகும். சங்ககால மகளிர் வீரமிக்கவர்களாகவும், அரசர்களுடன் அரியணையின் அருகிலும், அழகு அணிகலன்களுடன் அலங்கரித்து இருப்பதைக் காணமுடிகிறது. இந்நிலை மட்டுமின்றி பெண்கள் தாங்கள் வாழ்வில் இன்ப துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் நிலை இன்று மட்டுமல்லாமல் சங்ககாலத்திலும் இருந்திருக்கிறது. அதனை மையமாகக வைத்து "சங்க இலக்கியங்களில் பெண்ணியம்" என்ற தலைப்பில் ஆராயப்படுகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** மகளிர், மாண்புகள், பெண்ணியம், சங்க இலக்கியம், காதல், வீரம்.

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது. வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்பது உண்மை. ஏனெனில், வாழ்க்கையில் சாதாரணமாக நடக்க முடியாததைக் கூட ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காக கற்பனையாக வாழ்க்கையில் நடப்பதாக இலக்கியத்தில் குறிப்பிடுவதும் உண்டு. எனவே, இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மொழி சமூகத்தின் வாழ்வு முறையை முழுவதும் உருவாக்கம் செய்ய முடியாது. ஆனால் சமூகத்தின் நிலையையும் பண்பாட்டையும் ஓரளவு காணமுடியும். சங்க இலக்கியத்தில் சங்ககால மக்களின் வாழ்வியல் உணர்வுகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. அதனடிப்படையில் சங்க இலக்கியத்தில் பெண்ணியம் எவ்வாறு பேசப்படுகிறது என்பதை ஆராய்வதே நோக்கமாகும்.

## சங்ககால மகளிரின் பண்புநலம்

பழந்தமிழர் பண்பாட்டின் நிலைகளனாய் விளங்கியவை சங்ககால மக்களின்

அரும்பெரும் பண்புகள் ஆகும். அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புகள் பெண்களுக்குரியன. இதனை,

**அச்சமும் நாணும் மடனும் முந்துறதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.களவியல்: 96)**

என்னும் தொல்காப்பிய நூற்பா புலப்படுத்துகிறது. மகளிருக்கு உயிரைக் காட்டிலும் நாணமும், நாணத்தைக் காட்டிலும் கற்பும் மிகச்சிறந்தது என்பதைத் தொல்காப்பியர்,

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செய்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று (தொல்.களவியல்: 111 )**

என்கிறார். கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல் ஆகிய பண்புகளும் மகளிருக்கு இன்றியமையாதவை என்பதை,

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்ற மோம்பலும்**
**புறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். பொருளியல்: 150)**

என்னும் தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

வாழ்க்கைத் துணை நலம் என்னும் தலைப்பில் இவ்வுலகில் பெண்மையைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை என்பதை,

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்**
**திண்மை உண்டாகப் பெறின் (குறள்., 54)**

என்று திருக்குறள் சிறப்பிக்கின்றது.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகள் கூறப்பட்டிருந்தாலும் அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கான சம உரிமைகள் என்பது பொதுவான கருத்தியலாகும். பெண்ணியத்திற்கு உலகில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தும்படியான, முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுப்பது என்பது இயலாத ஒன்றாகும். **பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டின்படி அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் (முத்துச் சிதம்பரம், ச. ப. 11)** என்று புட்சர் கருதினார். பெண் தன் எதிர்காலத்தை நோக்கிச் செயல்படவும், தங்களுடைய கருத்தை வெளிப்படுத்தவும் முயலுவதே பெண்ணியம் எனலாம்.பெண்ணியம் பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. சமூகத்தில் அனைவருக்கும் சமமான நிலை உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் நோக்கமாகும். அதே சமூகத்தில் ஆணும் பெண்ணும் பாலின பாகுபாடுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப்படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கையாகும்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**சங்க இலக்கியங்களில் பெண்ணியம்**

பெண் - மனைவி, கணவன் சொல் தட்டாதவளாகவும், அவனால் வாழ்க்கை நோக்கம் கற்பிக்கப்பட்டவளாகவும் சங்கஇலக்கிய கவிதைகள் பதிவுசெய்கின்றன. இதனை,

**வினையே ஆடவர்க்கு உயிரே**
**மனையுறை மகளிருக்குஆடவர் உயிர்என**
**நமக்கு உரைத்தவர் தாமே (குறு., 135)**

என்ற வரிகள் கணவன் -மனைவி ஆகியோரின் கடமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன.

**மனைவி என்னும் நல்லாள்**

தலைவன் பரத்தையோடு சிலகாலம் இருந்தான். இப்பொழுது அவன் தன் மனைவியோடு வாழ விரும்பி அவளது தோழியின் உதவியை நாடுகின்றான். தோழியைத் தனக்காக தலைவியிடம் செல்ல வேண்டுகிறான். அதற்குத் தோழி,இப்பொழுது பரத்தையரோடு இருந்ததற்கான அடையாளங்களோடு நீ வந்திருக்கிறாய். ஒரு காலத்தில் நீ வறுமையில் வாடினாய். உனக்குத் தலைவி மனைவியாக வந்த பிறகுதான் வளமான வாழ்க்கை கிடைத்தது என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று கூறுவதை,

**உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்**
**தழை அணிப் பொழிந்த ஆயமொடு துவன்றி**
**விழாவொடு வருதி நீயே யிஃதோ**
**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனி விழாவாயிற் றென்னுமிவ்வூரே. (குறு., 295)**

என்ற குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. இப்பாடல் மூலம் வறுமையில் வாடிய தலைவனது சாதாரண குடும்பம் பலரும் விருந்து உண்டு செல்லும் அளவிற்கு வளமாவதற்குக் காரணம் அவனது தலைவி ஆவாள். சங்க காலத் தலைவன் பொறுப்பின்றி பரத்தமையை நாடிச்சென்றாலும், மனைவி என்பவள் தன் குடும்பத்தை வளமாக்குவதற்குரிய வேலையைச் செய்பவளாகவும் தன் கடமையைச் சிறப்புற ஆற்றும் பெண்ணாகவும் செயல்படுவதைக் காணமுடிகிறது.

**கற்பு**

ஆண்கள் பல பெண்களுடன் உறவுவைத்துக் கொள்வது என்ற பாலியல் சுதந்திரத்தைப் பெற்று உல்லாசமாக வாழ்ந்து வந்தனர் என்பதை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தி கட்டாயப்பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் பரத்தமையிடம் சென்ற போது கண்டிக்கவில்லை என்பதை, **சேக்கை இனியர் பால் செல்வன் மனையாளால்… (பரி., 20. 86-88)** என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. எனவே பெண்ணுக்கு மட்டுமே ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


**பரத்தமையை ஏற்கும் பெண்கள்**

சங்ககால மகளிர் கணவன் பரத்தையிடம் செல்வதையும் ஏற்றுக் கொண்டனர். தொல்காப்பியரும்,

**கற்புவழிப் பட்டவள் பரத்தமையை ஏத்தினும்**

**உள்ளத்து ஊடல் உண்டு என மொழிப. (தொல்.பொருளியல்: 229)**

என்ற நூற்பாவின் மூலம் கற்பு வழிப்பட்ட தலைவி உலக இயல்பினைக் கருதித் தலைமகனுடைய புறத்தொழுக்கத்திற்கு உடன்படுவாள் என்று கூறுகிறார். பெண்கள் தலைவன் பரத்தையிடம் செல்வதை ஏற்றுக்கொள்ளும் பண்பிலும் பெண்ணிய உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. *கலித்தொகை* பாடலில் பெண்கள் பரத்தையிடம் செல்லும் தலைவனை ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்துவதை,

**நீரார் செறுவில் நெய்தலொடு நீடிய**

**...மகிழ்நன் பரத்தமை**

**நோவென் தோழி கடன் நமக்கு எனவே. (கலி., 75. 32-35)**

என்ற பாடல் தலைவியின் உள்ள உணர்வினைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. தலைவன் புதிய புதிய பரத்தயரை விரும்பும் நிலையில், அதனைத் தலைவி எதிர்த்துக் கேட்டாலும் ஒன்றும் நிகழப் போவதில்லை என்பதை கருத்தில் கொண்டு வாய்மூடியவளாக இருந்திருக்கிறாள். ஆனால் அவள் மனம் நொந்து புலம்புவதைக் காண முடிகிறது.

பரத்தையிற் பிரிந்த கணவன் தன்தளர் நடைப்புதல்வனை நினைத்து இல்லம் திரும்புகிறானே தவிர புதல்வியை விரும்பி அல்ல என்பதை,

**தளர்நடைப்புதல்வனைஉள்ளி, நின்**

**வளமனைவருதலும், வௌவியோளே (ஐங்., 66. 3-4)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகிறது. பெண்கள் முன்னேற்றம், புரட்சி, அனைத்துத் துறைகளிலும் பெண்கள் என காலம் வளர்ந்து கொண்டிருந்தாலும், சடங்கு, நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்ற பல பெயர்களில் பெண்கள் துன்பங்களை எதிர்கொள்வது இந்த இருப்பதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

**பெண் பாலராய் பிறப்பதே துன்பம்**

பெண்கள் தான் பெண்ணாய் பிறப்பதே பாவம் என்று கூறுவது இக்காலத்தில் மட்டுமின்றி சங்ககாலத்திலும் இருப்பதை,

**காலை எழுந்து கடுந்தேர் பண்ணி**

**வாலிழை மகளிர்த் தழீஇய சென்**

**மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென**

**மறுவருஞ் சிறுவன் தாயே**

**தெறுவது அம்மஇத் திணைப் பிறத்த ல்லே. (குறு., 45)**

என்ற *குறுந்தொகை* பாடல் குறிப்பிடுகிறது. காலையில் எழுந்து விரைந்து செல்லும் குதிரைகளைத் தேரில் பூட்டி, மிகுந்த அணிகலன்களை அணிந்த பரத்தையரைத், தழுவும் பொருட்டு, வளமை பொருந்திய ஊரை உடைய தலைவன் சென்றான். அவன் மிகுந்த பெருமைக்குரியவன். அவன் மீண்டும் தன்னிடம் வந்தால் அவனை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்றெண்ணி சிறுவனைப் பெற்ற தலைவி மனம் கலக்கம் அடைகிறாள். தலைவியின் மனம் கலங்கக்கூடிய செயலைத் தலைவன் செய்தாலும் அதனை மறந்து அவனைத் தலைவி ஏற்றுக் கொள்வது துன்பத்திற்குரியதாயினும் அஃது இந்த பெண் குடியிற் பிறந்தவர் செய்யும் செயல் போலும் என்று வருந்துகிறாள். பெண்கள் இவ்வாறு புலம்புவதைத் தவிர்த்து என்று தனது உரிமைக்காகவும், தனது விடுதலைக்காகவும் எப்பொழுது சுயமாக முடிவெடுத்து அதை தைரியமாக செயல்படுத்தி வெற்றியடைகிறாளோ அன்றே அவளுக்கு முழு சுதந்திரம் கிடைக்கும்.

**காம உணர்வை வெளிப்படுத்தும் பெண்கள்**

பொதுவாக பெண்கள் தங்கள் காம உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை என்ற கருத்து உள்ளது. சங்க இலக்கியத்தில் வெள்ளிவீதியார் பாடிய இரண்டு நற்றிணைப் பாடல்களிலும் காம உணர்வை தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்று வெளிப்படையாகக் கூறுவதை, **யாமம் உய்யாமை நின்றன்று / காமமோ பெரிதே களைஞரே இலரே. (நற்., 335)** என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. காமம் மிக்க கழிபடர்கிளவி என்பது தலைமகளின் காம உணர்வு பெருகிக் கொண்டே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. தலைவி காமமிகுதியால் நள்ளிரவில் என் உயிர் நின்று விடும் போல உள்ளது என்கிறாள். காமநோய் பெரிதாகும். அதை நீக்குவார் யாரும் இல்லை என்று புலம்புவதாகப் பாடுகிறார் வெள்ளிவீதியார். இதைப் போன்று,

**கனை இருங் கங்குலும் கண்படை இலனே**
**அதனால் என்னோடு பெருங்கொல்**
**இவ்வுலகம் உலகமொடு பொருங்கொல் என் அவலம் உறு நெஞ்சே (நற்., 348)**

என்ற பாடலில் தலைவன் இல்லாத நேரத்தில் உலகம் என்னோடு போரிடுகிறதா அல்லது துன்புறும் என் நெஞ்சம் இந்த உலகத்தோடு போரிட்டுக் கொண்டிருக்கின்றதா என்று காம உணர்வைத் தலைவி வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**ஆழ்ந்த நம்பிக்கையும் அதீத நம்பிக்கையும்**

தலைவன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்லும்போது கார்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாகச் சொல்லிச் செல்வது வழக்கம். அந்த நிலையில் கார்காலம் தொடங்கிவிட்டது. ஆனால் தலைவன் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் தலைவி இது உண்மையான கார் காலம் இல்லை. அதாவது கார்காலத்து அடையாளமான கொன்றைப் பூக்கள் பூத்துள்ளன. அதனால் கார்காலம் தொடங்கிவிட்டது என்று சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

ஏனென்றால் என்னுடைய தலைவன் பொய் சொல்ல மாட்டார் என்று கூறுவதாக ஒரு பாடல் உள்ளது. இதனை,

**புதுப் பூங்கொனறைக் கானங் காரெனக் கூறினும்**
**யானோ தேறேன் அவர் பொய் வழகலரே.(குறு., 21)**

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. தலைவன் பொய் வழங்கலையே அதாவது கார்காலமாக இருந்தால் அவர் திரும்பி வந்திருப்பார் என்று தலைவி வாதாடுகிறாள். இவ்வாறு தலைவி தலைவன் மேல் வைத்திருந்த ஆழ்ந்த நம்பிக்கையை இப்பாடல் வரிகள் புலப்படுத்துகிறது.

இன்னொரு முல்லை நிலத்தலைவி கார் காலம் இல்லாத பிற காலத்தில் பெய்த மழையைக் கார்காலம் என்று கருதுகிறாள். இதனை,

**மடவ வாழி மஞ்ஞை மாயினம்**
**கால மாரி பெய்தென அதனெதிர்**
**ஆலலும் ஆலின, பிடவும் பூத்தன;**
**காரன்று இகுளை! தீர்கநின் படரே;**
**கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்**
**புதுநீர் கொளிஇய பஉகுத்தரும்**
**நொதுமல வானத்து முழங்கு குரல் கேட்டே (குறு., 251)**

என்ற பாடல் மூலம் தலைவிக்குத் தலைவன் மேல் வைத்திருந்த அதீத நம்பிக்கையை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்விரு பாடல்கள் மூலம் சமூககாலப் பெண்கள் ஆண்களால் மூளைச்சலவை செய்யப்பட்டார்கள் என்பதையும், ஆண்கள் இட்ட வலைக்குள் சிக்கிக்கொண்டார்கள் என்பதையும் அறியமுடிகிறது. தனக்கென்ற ஒரு தனித்தன்மையின்றி, அவர்களின் வாழ்வோடும் தாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதுதான் இன்ப வாழ்வு என அவர்கள் கற்பித்ததையும் ஏற்றுக் கொண்டனர். தலைவனுக்காகவே தான் படைக்கப்பட்டுள்ளோம் என்ற அசைவில்லாத நம்பிக்கை உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

**நிறைவுரை**

சங்க இலக்கியங்கள் சங்ககால மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கின்றன. அவர்கள் மக்கள் வீரம், காதல் என்ற இரண்டு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போன்று ஆண் பெண் என்ற இரு பாலினங்கள் சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி என்ற பெயரில் ஒளிவீசுகின்றன. தலைவன் தன்னிகரில்லாதவனாகவும், தலைவி தலைவனைச் சார்ந்து வாழ்பவளாகவும் சங்க இலக்கியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. பெண்கள் இன்றையச் சூழலில் பெண்ணியத்திற்கு போராடுகின்றனர். ஆனால் சங்க கால மக்கள் அன்றே தம் வாழ்வில் துன்பங்கள் பலவற்றைக்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

கடந்து வாழ்ந்ததனர். எனவே, சங்ககாலம் முதல் தற்காலம் வரை பெண்ணியம் ஏதோ ஒருவகையில் பேசப்படுகிறது என்பது புலனாகிறது.

**குறிப்புகள்**

[1] கோதண்டம், கொ. மா. *திருக்குறள்.* இளைஞர்களுக்கான எளிய உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2014.

[2] சாமிநாதையர், உ.வே. *குறுந்தொகை மூலமும் உரையும்.* உ. வே. சா. நூல் நிலையம், சென்னை, 2000.

[3] சுப்ரமணியம், பெ. *பரிபாடல்* (மூலமும்உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை, 2007.

[4] தட்சிணாமூர்த்தி, அ. *ஐங்குறுநூறு* (மூலமும்உரையும்). நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை. 2011.

[5] திருஞானசம்பந்தர், ச. *தொல்காப்பியம் பொருள் அதிகாரம்* (மூலமும் உரையும்). கதிர் பதிப்பகம், திருவையாறு, 2022.

[6] புலியூர் கேசிகன். *நற்றினை இரண்டாம் பகுதி தெளிவுரை.* பாரி நிலையம், சென்னை, 2007.

[7] முத்து சிதம்பரம், ச. *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்.* முத்து பதிப்பகம், திருநெல்வேலி, 2005.

[8] விஸ்வநாதன், அ. *கலித்தொகை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.